செலுத்தவேண்டும். ஒவ்வோர் உயிரும் விலை மதிக்க முடியாத உயிர். அதே நேரத்திலே, தண்ணீர்ப் பற்றாக்குறையிலே, குழந்தைகளைக் காப்பதைப் போல அந்தக் கரும்பைப் பாதுகாத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் கரும்புப் பயிர் நாசமாகின்றது. இதையெல்லாம் தடுப்பதற்கு அதிகாரிகள் அதிகக் கவனம் செலுத்தவேண்டும். சில இடங்களிலேகூட Electric வேலியெல்லாம் செய்து வைத்திருந்தார்கள். இப்போதெல்லாம் பயப்படுகிறார்கள். இதுவெல்லாம் தேவையில்லாத ஒன்று; விரட்டினாலே போதும். விரட்டுவதற்கு அதிகாரிகள் இதிலே அக்கறை செலுத்த வேண்டுமென்ற அறிவிப்பை நம்முடைய அமைச்சர் அவர்கள் எல்லா அதிகாரிகளுக்கும் வழங்க வேண்டுமென்று கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு திரு. ப. மோகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கு உறுப்பினர் அவர்கள் சொல்லிய கருத்துக்கேற்ப, பல்வேறு நடவடிக்கைகளை அரசு எடுத்திருந்தாலும் வனம் முழுவதும் வேலி போடுவது என்பது இயலாத காரியம். என்றாலும்கூட, யானைகள் வெளியே வராத அளவிற்கு, அவற்றிற்கு தாகத்தைத் தீர்ப்பதற்காக சில தொட்டிகளை அமைப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்படும் என்பதையும், அதுகுறித்து அந்தந்தப் பகுதிகளிலே வனச் சரகர்களுக்கெல்லாம் உத்தரவிடப்படும் என்பதையும் இந்த நேரத்திலே இந்த அவைக்குப் பணிந்து தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

(4) அறிக்கைகள் அளித்தல்

(அ) மதிப்பீட்டுக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திரு. சி. சிவசாமி அவர்கள்.

திரு. சி. சிவசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி, 2001-2002 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் மதிப்பீட்டுக் குழு தனது ஆய்வுக்கு எடுத்துக்கொண்ட கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள் குறித்த குழுவின் ஒன்பதாவது அறிக்கையினைக் குழுவின் சார்பாக பேரவைக்கு அளிக்கிறேன்.